## இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபை - 2018

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- சபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- சபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் ரூபா 4,237,429 கூட்டுமொத்தமான சபைக்குச் சொந்தமான காணிகளின் பெறுமதி மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்களை மீள்மதிப்படு செய்வதற்கு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் பூர்வாங்க செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் வருடாந்த காப்புறுதிக்கு பயன்படுத்துவதற்கு தேவையான மீள்மதிப்பீட்டுத் தொகைகளை மாத்திரம் அவர்கள் வழங்கியிருந்தனர்.<br><br>மீண்டும் இது தொடர்பாக கவனம் செலுத்தி மீள்மதிப்பீட்டுத் தொகைகளை பெற்று நிதிக்கூற்றுக்களை நாளதுவரையாக்குவதற்கு காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் காணிகளை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களில் அவற்றின் நியாயப் பெறுமதி காட்டப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் 15 ஆம் பிரிவின் பிரகாரம் இருப்பானது கிரயம் அல்லது தேறக்கூடிய நிகரப் பெறுமதி என்பவற்றில் குறைந்த பெறுமதியில் கணிப்பிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் இருப்பானது சராசரிக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டு ரூபா 17,991,255 பெறுமதியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | இருப்புக்களை கணக்கீடு செய்வதற்கு தற்போது கணனி மென்பொருளொன்றை சபை பயன்படுத்துகின்றது. அம் மென்பொருள் ஆரம்பத்திலிருந்து சராசரிக் கிரயத்திலேயே இருப்புக்களை மீள்மதிப்பீடு செய்கின்றது. 2019 ஆம் ஆண்டிலிருந்து அந் நியமத்திற்கிணங்க இருப்புக்களை பெறுமதியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதால் கணக்கீட்டுக் கொள்கையானது அந் நியமங்களுடன் இணங்குதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல வருடங்களிற்கு மேலாக நானாவித செயற்திட்டங்களிற்காக திறைசேரி மற்றும் ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் மூலதன மானியங்களாக காட்டப்பட்டிருந்த ரூபா 219,904,818 கூட்டுமொத்தமான தொகையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சொத்துக்களை இனங்கண்டு அச் சொத்துக்கள் தொடர்பாக சபையின் கணக்கீட்டுக் கொள்கைக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மூலதன மானியங்களை கணக்கீடு செய்வதற்கான கொள்கைக்கிணங்க 2016 ஆம் ஆண்டு தொடக்கம் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் 2015 ஆம் ஆண்டு வரையான மானியங்களை தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு வெளியிலுள்ள கணக்காய்வு நிறுவனமொன்றிற்கு விசேடமாக பணிப்பொறுப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் இறுதி அறிக்கை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் இறுதி முடிவை அடிப்படையாகக் கொண்டு தேவையான நடவடிக்கைகள் காலக்கிரமத்தில் எடுக்கப்படும். | சபையின் மூலதன மானியங்களை கணக்கீடு செய்வதற்காக கொள்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 95,293,799 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அத் தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 94,398,593 ஆக காட்டப்பட்டிருந்ததால் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 895,206 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளை சீராக்கம் செய்யும் போது மானியங்களிற்கு ஆண்டின் போது இனங்காணப்பட்ட வருமானங்கள் மற்றும் அறவிடமுடியாக்கடனிற்கான ஏற்பாடுகள் சீராக்கம் செய்யப்பட்டிருந்தமை காரணமாக ஏற்பட்ட தவறை சீர்செய்து மீண்டும் திருத்திய காசுப்பாய்ச்சல் கூற்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வது தொடர்பாக செலவிடப்பட்ட பணம் காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாக காட்டப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் போது திறைசேரி, அமைச்சு மற்றும் இன்னொரு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட மானியங்களில் வருமானமாக இனங்காணப்பட்டிருந்த ரூபா | - மேற்படி - | வருமானமாக இனங்காணப்பட்ட தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாக சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 64,372,163 கூட்டுமொத்த தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காசற்ற சீராக்கங்களின் கீழ் ரூபா 116,758,016 ஆக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. ஆகையால் செயற்பாட்டு நடவடிக்கைகள் ரூபா 52,385,853 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | | |
| (இ) | ரூபா 26,084,947 கூட்டுமொத்தமான முன்னைய ஆண்டு சீராக்கங்கள் செயற்பாட்டு நடவடிக்கைகளின் காசல்லாத சீராக்கங்களின் கீழ் காட்டப்பட்டிருந்ததால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் அத் தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | முன்னைய ஆண்டுச் சீராக்கங்கள் காசுப்பாய்ச்சல் கூற்றில் சீராக்கம் செய்யப்படக்கூடாது. |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | **ரூபா** | | | |
| கடன்பட்டோர் | 27,831,898 | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் | **<u>கடன்பட்டோர் மீதிகள்</u>** 2018.12.31 இல் உள்ளவாறான கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக கடன்பட்டோரின் முகவரிகளை கண்டுபிடிக்க முடிந்திருந்த 206 கடன்பட்டோர்களிற்கு மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டிருந்தன. அவற்றில் 30 கடிதங்கள் திருப்பி அனுப்பப்பட்டிருந்ததுடன் 17 கடிதங்களிற்குரிய பதில்கள் அனுப்பப்பட்டிருந்தன. கடன்பட்டோர் மீதிகளில் பலவற்றிற்குரிய முகவரிகள் மற்றும் தொடர்புடைய தகவல்களை | சபையின் கடன்பட்டோர் மீதிகள் தொடர்பாக மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் பெறப்பட வேண்டியதுடன் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளிற்கான வயதுப் பகுப்பாய்வுகள் தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | கண்டுபிடிப்பது நடைமுறையில் சிக்கலானதாக காணப்படுகின்றதால் இது தொடர்பில் விபரமான விசாரணை அறிக்கையொன்று கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். |
| கடன்கொடுத்தோர் | 27,714,480 | வயதுப் பகுப்பாய்வுகள் | **<u>கடன்கொடுத்தோர் மீதிகள்</u>**<br>2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்காக வெளியக கணக்காய்வு நிறுவனமொன்றிடமிருந்து பெறப்பட்ட அறிக்கை ஏற்கனவே கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு தீர்ப்பனவு செய்வதற்கான மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>2016 ஆம் ஆண்டின் பின்னர் காணப்பட்ட கடன்கொடுத்தோர் மீதிகளை முறையாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டிற்குரிய கடன்கொடுத்தோர் மீதிகள் அனைத்தும் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன. |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசச் குடியரசின் தாபன விதிக்கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 4.7 ஆம் பிரிவு | முழுச் சம்பளத்துடனான விடுமுறையில் கல்வி கற்பதற்காக வெளிநாடு சென்று பிணைமுறி நிபந்தனைகளை மீறியிருந்த 04 உத்தியோகத்தர்களிடம் இருந்து 02 – 27 ஆண்டு காலமாக சபைக்கு பெறப்பட வேண்டிய ரூபா 3,507,706 கூட்டுமொத்த தொகையை அறவீடு செய்யத் தவறியமை. | முழுச் சம்பளத்துடனான விடுமுறையில் கல்வி கற்பதற்காக வெளிநாடு சென்று பிணைமுறி நிபந்தனைகளை மீறியிருந்த 02 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்தால் எங்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் உத்தியோகபூர்வ கடிதங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் விநியோகிக்கப்படாதமை காரணமாக அவை திருப்பியனுப்பப்பட்டுள்ளன. மேலும் இது தொடர்பில் சட்டமா அதிபரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளிற்கு இணங்க அப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 104 | ஆறு சந்தர்ப்பங்களின் போது விபத்துக்கள் இடம்பெற்ற திகதிகளிலிருந்து 6 – 22 மாத காலப்பகுதி கடந்திருந்த போதிலும் விசாரணைச் சபைகளை நியமனம் செய்து நட்டங்களை மதிப்பீடு செய்வதற்கும் பொறுப்பான தரப்பினர்களை இனங்காண்பதற்கும் தவறியமை. | முன்னைய ஆண்டில் இடம்பெற்ற விபத்துக்களினால் ஏற்பட்ட சேதங்களை திருத்தம் செய்வதற்கும் காப்புறுதி இழப்பீடுகளை சேகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இது தொடர்பான புலன்விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. | நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் வாகன விபத்துக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2018 மார்ச் 19 ஆம் திகதிய திறைசேரிச் செயலாளரின் 01/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | 28 – 37 ஆண்டுகள் பழமையான 05 வாகனங்கள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டு 02 – 04 ஆண்டு காலப்பகுதி கடந்திருந்த போதிலும் அவ் வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பழைய வானங்களை அகற்றுவதற்கு கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டிருந்ததுடன் அதற்கான பணியாளர் சபை அங்கீகாரம் 2019.05.24 இல் பெறப்பட்டிருந்தது. அவ் அங்கீகாரம் தொடர்பாக அமைச்சு செயலாளரின் இணக்கப்பாடு பெறப்பட்டதும் அகற்றல் நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பழைய வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 நிதிய முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 மார்ச் 03 ஆம் திகதிய 1/2008 ஆம் இலக்க திறைசேரிச் செயற்பாடுகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்கத்தால் நேரடியாக நிதியிடப்படுகின்ற நிறுவனங்களின் தொழிற்பாடுகளிற்காக தேசிய பொருளாதாரத்திற்கு சாதகமான விளைவுகளை உறுதிப்படுத்துகின்ற முறையான முதலீட்டு முறைமையொன்று பின்பற்றப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் சனவரி – திசெம்பர் காலப்பகுதியின் போது நடைமுறைக் கணக்கொன்றில் ரூபா 37 மில்லியன் தொடக்கம் ரூபா 106 மில்லியன் வரையான வீச்சிலான மீதியொன்று செயற்பாடற்றிருந்ததுடன் ரூபா 02 மில்லியன் தொடக்கம் ரூபா 36 மில்லியன் வரையான வீச்சிலான மீதியொன்று ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலமாக இன்னொரு நடைமுறைக் கணக்கில் விளைவற்றிருந்தது. | ரூபா 60 மில்லியனிற்குச் சமமான மூலதன கட்டுநிதிக்குரிய பணத்தில் அதிகமானவை ஆண்டின் இறுதி காலாண்டின் போது சபையின் மூலதன செலவினங்களிற்காக விடுவிக்கப்பட்டிருந்தன.<br><br>மேலும் மூலதன செலவின தலைப்பின் கீழான உரிய பெறுகைகள் 2018 ஆம் ஆண்டின் போது முடிவுக்கு கொண்டுவரப்பட்டிருந்தன.<br><br>எனினும் குறித்த சில வேலைகள் பூர்த்தியடைந்த பின்னர் விலைப்பட்டியல்கள் 2019 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததால் அப் பணம் அவ் விலைப்பட்டியல்களை தீர்ப்பனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தேசிய பொருளாதாரத்திற்கு மிகவும் சாதகமான விளைவுகளை உறுதிப்படுத்துகின்ற நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 21,250,394 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 45,382,394 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 24,132,000 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது பிற்போடப்பட்ட வருமானம் ரூபா 2,362,088 தொகையால் அதிகரித்தமை மற்றும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மீதான பராமரிப்புச் செலவினம் ரூபா 27,102,375 தொகையால் அதிகரித்த போதிலும் ஏனைய செலவினங்கள் ரூபா 57,303,562 தொகையால் குறைவடைந்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கு பிரதானமாக பங்களித்திருந்தன.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்கள் தொடர்பான போக்குப் பகுப்பாய்வு

**வருமானம் :**

மீளாய்வாண்டின் போது திறைசேரியிடமிருந்து பெறப்பட்ட மானியங்களுடன் சேர்த்து சபையின் மொத்த வருமானம் ரூபா 572,387,651 தொகையாக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் ரூபா 528,773,233 கூட்டுமொத்தமான மொத்த வருமானத்துடன் ஒப்பிடும் போது ரூபா 8 சதவீத அதிகரிப்பை சுட்டிக்காட்டியிருந்தது. அரசாங்க மானியங்கள் தவிர தோட்டங்கள் மற்றும் ஏனைய மூலங்களிலிருந்தான வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 58,094,418 தொகையால் அதாவது 41 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

சபைக்குச் சொந்தமான நான்கு தோட்டங்களில் இரண்டு தோட்டங்கள் மீளாய்வாண்டின் போது நட்டமடைந்திருந்ததுடன் இரண்டு தோட்டங்கள் இலாபமடைந்திருந்தன. முன்னைய ஆண்டின் போது ரூபா 11,279,963 டார்ரன்பீல்ட் (Dartonfield) தோட்டத்தின் இலாபம் மீளாய்வாண்டின் போது ரூபா 12,877,030 வரை 14 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

**செலவினம் :**

மீளாய்வாண்டில் சபையின் மொத்த செலவினம் ரூபா 593,638,045 ஆக இருந்ததுடன் அது முன்னைய ஆண்டின் ரூபா 574,155,627 மொத்த செலவினத்துடன் ஒப்பிடும் போது 3 சதவீத அதிகரிப்பாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மின்பிறப்பாக்கியொன்றை கொள்வனவு செய்வதற்காக 2017 திசெம்பர் 29 இல் அரச நிறுவனமொன்றிற்கு ரூபா 15,701,989 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவ் இயந்திரம் 2019 மே 31 வரையிலும் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | 02 மின்பிறப்பாக்கிகளை வழங்கி நிறுவுவதற்கான ஒப்பந்தம் இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் 12 மாத காலப்பகுதியினுள் இவ் வேலையை பூர்த்தி செய்யும் வகையில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருந்தன. எனினும் | செலவிடப்பட்ட நிதிகள் சிக்கனமாகவும் செயற்திறனாகவும் இருப்பதற்காக தாமதமின்றி இயந்திரங்கள் விநியோகிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இணங்கப்பட்டவாறு மேற்கொள்வது நடைமுறையில் சிக்கலானதாக காணப்பட்டது. விசாரணையின் போது எங்களது நிறுவனத்திற்காக மின்பிறப்பாக்கிகள் கட்டளையிடப்பட்டுள்ளதுடன் அவை பெறப்பட்டதும் உரிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் நிறுவுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மின்சார சபை அறிவித்திருந்ததால் அதற்கிணங்க உடன்படிக்கை காலப்பகுதியினை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) ஜனதா தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான நாரம்பொல (அளவ்வ) மற்றும் குமாரவத்தை (மொனராகலை) காணிகளில் ரூபா 16,199,917 தொகை செலவிடப்பட்டு கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அக் காணிகள் சட்ட ரீதியாக சபையால் கையேற்கப்பட்டிருக்கவில்லை. | ஜனதா தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான நாரம்பொல (அளவ்வ) மற்றும் குமாரவத்தை (மொனராகலை) காணிகளை கையேற்பதற்காக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அமைச்சின் மூலம் இக் காணிகளை கையேற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்ததுடன் அச் சட்ட நடவடிக்கைகள் பூர்த்தியடைந்த பின்னர் சபைக்கு இக் காணிகள் சட்ட ரீதியாக உரித்தாக்கப்படும். | கையேற்பதற்கு முன்னர் சபைக்கு உரித்தற்ற காணிகளில் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்படக் கூடாது. காணிகளை கையேற்கும் நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். |

**3.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2010 – 2017 ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 15,743,829 கூட்டுமொத்த பெறுமதியான HTM 2000 ஆம் இலக்க Moving Die Rheometer உபகரணம், Agin oven, K 489 ஆம் இலக்க Vacuum oven, Rubber Process Analyzer ஆகிய நான்கு உபகரணங்கள் திருத்தம் செய்யப்பட்டு பயன்படுத்தப்படாததால் 02 ஆண்டுகள் தொடக்கம் 08 ஆண்டுகள் வரையான காலப்பகுதிக்கு மேலாக விளைவற்றிருந்தன. | 2010 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட HTM 2000 ஆம் இலக்க Moving Die Rheometer உபகரணம் 02 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் அவ் உபகரணத்தால் வழங்கப்பட்ட தரவில் சிறிய தவறுகள் பின்னர் இனங்காணப்பட்டதால் திருத்த நடவடிக்கைக்காக உள்ளூர் முகவரிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.<br><br>அடுத்த 6 மாதங்களினுள் இயல்புநிலை எதிர்பார்க்கப்படுகின்றது. Agin oven எதிர்காலத்தில் | கேள்விதாரரை தெரிவு செய்யும் போது விற்பனைக்குப் பின்னரான சேவைகள் மற்றும் திருத்தங்களின் சாத்தியத்தன்மை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திருத்தம் செய்யப்படும். K 489 ஆம் இலக்க Vacuum oven அண்மைக் காலமாக செயற்பாடற்றிருந்தது. அவ் உபகரணத்தை மீளநிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ஜேர்மன் தொழில்நுட்பத்தில் இயங்குகின்ற Rubber Process Analyzer (RPA) இற்கு தேவையான earthling voltage ஆய்வுகூடப் பகுதியில் காணப்படவில்லை. earthling voltage ஐ ஒழுங்குபடுத்துவதற்கு Dryer மற்றும் Compressor கொள்வனவு செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளது. அதற்கிணங்க Mon Tech நிறுவன பொறியியலாளர்கள் 2019.03.14 இல் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் இரத்மலானை அலுவலகத்தில் RPA உபகரணத்தை நிறுவியிருந்தனர். அதிலிருந்து இவ் உபகரணம் இன்று வரை இறப்பர் கலவைகளை பகுப்பாய்வு செய்தற்காக பயன்படுத்தப்படுகின்றது. | |
| (ஆ) | இறப்பர் மூலப்பொருள் மற்றும் இரசாயன பகுப்பாய்வுப் பிரிவில் 15 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக விளைவற்றிருந்த Two Roll Mill Cal/006, Hydrolic press Cal/010 ஆகிய இரண்டு இயந்திரங்களும் தொல்பொருளியல் இயந்திரங்களாக பாதுகாக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அவை பாதுகாப்பின்றி மூடப்படாமல் வெளியே காணப்பட்டது. | 1972 ஆம் ஆண்டில் Colombo Plan செயற்திட்டத்தின் கீழ் Two roll mill இயந்திரங்கள் மூன்றை எங்களது நிறுவனம் பெற்றிருந்தது. அதில் இரண்டு இயந்திரங்கள் நாளதுவரை ஆராய்ச்சிகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. அவ் இயந்திரங்களிற்கு தற்போது சந்தையில் துணைக்கருவிகளை பெற்றுக்கொள்ள முடியாதிருப்பதால் அவ் இரண்டு இயந்திரங்களும் திருத்தம் செய்யப்படுவதற்கு செயற்பாடற்ற இயந்திரத்தின் பாகங்கள் | நூதனசாலைக்கு அனுப்புவதற்காக பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். |

| | | |
| --- | --- | --- |
| | பயன்படுத்தப்பட்டன. இதனால் அவ் இயந்திரத்தின் உட்பக்கத்தில் அதிகளவான துணைக்கருவிகள் காணப்படாதிருந்ததுடன் தொல்பொருளாக கருதப்பட்டு நூதனசாலையில் அதனை வைப்பதற்கு முன்மொழியப்பட்டிருந்தது.<br><br>Hydrolic press இயந்திரமும் 1972 ஆம் ஆண்டில் Colombo plan செயற்திட்டத்தின் மூலம் பெறப்பட்டிருந்ததுடன் அவ் இயந்திரத்தை திருத்துதல் சிக்கனமற்றிருந்ததுடன் இதுவும் நூதனசாலைக்கு அனுப்பப்படுவதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. 2019 சனவரியில் இத் திணைக்களம் திருத்தப்பட்ட போது அவ் இரண்டு இயந்திரங்களும் திணைக்களத்திலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் அருகிலுள்ள கட்டிடத்தில் அமைந்துள்ள நிழற்பகுதியில் வைக்கப்பட்டிருந்தது. இயந்திரம் பெரியதாகவும் 7 தொண் நிறையுடையதாகவும் இருப்பதால் அறையொன்றில் இதனை வைக்க முடியாதிருந்தது. | |

### 3.3 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிர்வாகக் கட்டிடம் மீதான திருத்தங்கள் தொடர்பாக ஒப்பந்ததாரரிற்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 4,142,660 ஆக இருந்த போதிலும் ரூபா 4,644,480 தொகை செலுத்தப்பட்டிருந்ததால் ரூபா 501,820 மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இக் கொடுக்கல் வாங்கல்கள் மீளப் பரீட்சிக்கப்பட்டு மேலதிகக் கொடுப்பனவு விடயத்தில் அவரிற்கு செலுத்தப்பட வேண்டிய ஏனைய ஒப்பந்த பணத்திலிருந்து மேலதிகமாக செலுத்தப்பட்ட தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணம் 137 மற்றும் 138 இன் பிரகாரம் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |